# மொழியாற்றல்விருத்திகனிஷ்ட இடைநிலை மாணவர்களின் வினைத்திறனான கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்

Shandru Mariyadas

*Dept. of Education and Childcare, Faculty of Arts and Culture, Eastern University, Srilanka.*
*chandrumariyadas@yahoo.com*

**ஆய்வுச்சுருக்கம்** - மாணவர்களின் கற்றல்சார் வினைத்திறன் மிக்கதான செயற்பாடுகள் சிறப்பாக அமைவதற்கு அவர்களிடம் காணப்படும் மொழியாற்றல் விருத்தி பெரும் பங்காற்றுகின்றது. ஆனால் இம்மொழியாற்றல் விருத்தியானது அனைத்து மாணவர்களிடமும் ஒரே மாதிரியாக வளர்ச்சியடைவதில்லை அந்தவகையில் ஆரம்பப்பரிவில் இருந்து நேரடியாக உள்வாங்கப்படும் கனிஷ்ட இடைநிலை பிரிவு மாணவர்கள் இடைநிலைக் கற்றலின் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பது கண்டறியப் பட்டுள்ளது. இதனால் மொழியாற்றல் கற்றலில் தாக்கம் செலுத்துகின்றது என்பது புலனாகிறது. மாணவர்கள் தெளிவாக வாசிக்காமை, பேசுவதில் சிரமப்படுதல், கிரகித்தலில் இடர்படுதல், எழுத்துத்திறன்குறைவு, போன்றவற்றை வெளிக்காட்டினார்கள். அத்துடன் ஆசிரியர்கள் இவ்வாறான மாணவர்களினை ஏனைய மாணவர்களோடு இணைத்துக் கற்பிக்கும்போது அது கற்பித்தல் செயற்பாட்டில் சிரமங்களை ஏற்படுத்துகின்றது. அத்தோடு வீடுகளிலும் மாணவர்களின் மொழித்திறனில் பெற்றோர்களின் பங்களிப்பும் குறைவாக உள்ளது.மாணவர்கள் வாசித்தல், எழுதுதல், பேசுதல், கிரகித்தல் போன்றவற்றில் இடர்படுகின்றார்களா என்பதனை இனங்காணுதல்,ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடுகள், மாணவர்களின் மொழியாற்றல்களில் பங்களிப்புச் செய்கின்றதா என்பதை மதிப்பீடு செய்தல், மொழியாற்றல் விருத்தியின்மை மாணவர்களின் அடைவுகளில் தாக்கம் செலுத்துகின்றமையை உறுதிப்படுத்தல், மாணவர்களின் மொழியாற்றல் வளர்ச்சிக்கான விழிப்புணர்வுகளை பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஏற்படுத்தல்.என்பவற்றினை நோக்கங்களாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.இவ்வாய்விற்கு04 மாதிரிப் பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இலகு எழுமாற்று மாதிரிமூலம் 5 : 1 எனும் விகிதத்தில் தெரிவு செய்யப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. இலகு எழுமாற்று மாதிரிகள் மூலம் தரவுகள் பெறப்பட்டு, தரவுப் பகுப்பாய்வு முறைகளாக அளவறிசார் முறையும், பண்பறிசார் முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்து முறை, மற்றும் அவதானமுறைகள், உரையாடல்கள் மூலம் பெறப்பட்ட தரவுகளின்படி பகுப்பாய்வு செய்யப்பட்டதன் பின்னர்கண்டுபிடிப்புக்களாக வாசிப்பு, எழுத்துத்திறன், உச்சரிப்பு என்பன வினைத்திறனான கற்றலைப்பாதிக்கின்றமை கண்டறியப்பட்டுத. இதன் தீர்வுகளாக மாணவர்களிடத்தே மொழித்திறன் குறைபாட்டை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பதற்கான விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. மொழியாற்றலை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தல், மேலதீக வகுப்புக்கள் நடாத்துதல், கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பரீகாரகற்பித்தலை மேற்கொள்ளுதல்,விஷேட கற்பித்தல் முறைகளைப்பின்பற்றல்,கிரகித்தல் திறன் தொடர்பான ஆற்றல்களை வளர்த்தல், உளவியல் ரீதியான ஆலோசனை வளங்கல்,பெற்றோர்களுக்கு ஆலோசனைகள் வழுங்குதல், போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது மாணவரின் கற்றலை வினைத்திறனானதாக மாற்றலாம்.

**முதன்மைப் பதங்கள்** - கனிஷ்ட இடைநிலை மாணவர்கள், வினைத்திறனான கற்றல், மொழியாற்றல்விருத்தி.

## I. அறிமுகம்

### 1. ஆய்வறிமுகம்

இளமைப்பருவத்திலிருந்தே கல்வியைக் கற்கவேண்டியது மிகவும் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. இவ்வாறான கல்வியை ஒரு பிள்ளை தனது குடும்பத்திலும் தான்வாழும் சூழலிலும் பாடசாலையிலும் பெற்றுக் கொள்கின்றது. இவ்வாறு கல்வியைக் கற்கின்ற போது ஒருவரிடத்தில் மொழியாற்றல் விருத்தி மேலும் உயர்வடைகின்றது. ஆனால் இவ்மொழித்திறன் விருத்தியானது எல்லோரிடத்திலும் ஒரே மாதிரிக் காணப்படாது, ஒருவருக்கொருவர் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இங்கு மொழித்திறன் விருத்தியாக எழுத்துத்திறன், வாசிப்புத்திறன், செவிமடுத்தல்திறன் என வகைப்படுத்தி நோக்கப்படுகிண்றது.இவ்வாறான மொழியாற்றல் ஒவ்வொருவரிடமும் உயர்வான நிலையில் காணப்படுகின்ற போது கற்றல் சிறப்பாக அமையும்[1]. ஆனால் ஒரு சில மாணவர்கள் இம்மொழித்திறன் விருத்தி குறைந்தவர்களாக காணப்படுகின்றனர்.இதனால் கனிஸ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடையே மொழி விருத்தி குறைவானது ஏற்பட்டு வகுப்பறை கற்றல் கற்பித்தலிலும் தாக்கம் செலுத்துகின்றது. மொழியாற்றல் என்பது எழுத்து, வாசிப்பு, கிரகித்தல் மூன்றினையும் உள்நுழைத்துக்கொள்கின்றது[2]. இங்குமொழியானது கருத்துக்களினதும் ஒலிகளினதும் வடிவங்களினதும் ஒழுங்கமைப்பாகும். மொழி சிந்தனையின் பிரதான கருவியும் புலன்களால் உணரப்படும் குறியீடுகளைக் கொண்டதும் ஆகும்[3]. ஆற்றலும் அனுபவங்களும் ஒருதலைமுறையினரிலிருந்து இன்னுமொரு தலைமுறையினருக்கு கையளிக்கப் படுவதற்கு மொழியே துணைநிற்கின்றது[4].

### 2 ஆய்வின் பின்னணி

கல்குடா கல்வி வலய கோரளைப்பற்றுபிரதேசமானது கல்வி இடைவுகளில் பின்தங்கிய பிரதேசமாக காணப்படுகின்றது. இங்கு மாணவர்களின் மொழித்திறன் விருத்தியானது ஒருவருக்கொருவர் வேறுபட்டுக் காணப்படுகின்றது.அந்தவகையில்கனிஸ்ட இடைநிலைப் பிரிவில் கல்வி கற்கின்ற மாணவர்கள் இவ் மொழியாற்றல் விருத்தியில் அதிகளவில் இடர்படுகின்றனர். இதனால் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பல சிக்கல்களை எதிர் கொள்கின்றனர். இதனால் மாணவர்கள் தங்களது கற்றலில் பின்னடைவை எதிர் கொள்ள நேரிடுகின்றனர். இவ்வாறான பின்னடைவை அடைய பல்வேறு காரணிகள்

செல்வாக்குச் செலுத்துகின்றன. அந்த வகையில் ஒவ்வொரு மாணவரின் மொழியாற்றல் விருத்தியில் அவர்களது குடும்பத்தின் செல்வாக்கினைக் காணலாம். இங்கு பெற்றோர், பெற்றோருடன் இணைந்து வாழும் உறவினர்கள் சமூகம் ஏற்கும் பண்பாட்டு மாதிரியொன்றை குடும்பம் எனலாம். இங்கு கனிஸ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் அவர்களினது குடும்பம் அதாவதுமாணவர்களது பெற்றோர் குடும்ப அங்கத்தவர்கள் அவர்கள் வாழும் சூழல் குடும்பப் பின்னணி தாக்கம் புரியும். இங்கு பெற்றோர்கள் கல்வியறிவு குன்றியவர்களாகவும், பிள்ளைகளின் கல்வி மீது அக்கறைகொள்ளாதவர்களாகவும் காணப்படுகின்றனர். மாணவர்களை ஓய்வு நேரங்களில் புத்தக்களை வாசிக்க, ஆக்கங்களை எழுதத் தூ ண்டாது பெற்றோர்கள் தொலைக்காட்சி பார்த்தல் வேறு வேலைகளில் ஈடுபடுகின்றபோது பிள்ளைகளின் மொழித்திறன் விருத்தி குறைவடைகின்றது. இதனால் இவர்களால் கல்வியை மேலும் விருத்தி செய்ய முடியாது உள்ளது.

**3. ஆய்வுக் குறிக்கோள்கள்**

**பிரதானகுறிக்கோள்**

கல்குடா கல்வி வலயத்தின் கோரளைப்பற்றுப் பிரதேச கனிஸ்ட இடைநிலை பிரிவு மாணவர்களின் மொழியாற்றல் விருத்தி குறைபாடானது மாணவர்களின் கற்றல் கற்பித்தலில் ஏற்படுத்தும் தாக்கத்தைக் கண்டறிதல்.

**சிறப்புகுறிக்கோள்கள்**

1. மாணவர்கள் வாசித்தல், எழுதுதல், பேசுதல், கிரகித்தல் போன்றவற்றில் இடர்படுகின்றார்களா என்பதனை இனங்காணுதல்,
2. ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடுகள், மாணவர்களின் மொழியாற்றல்களில் பங்களிப்புச் செய்கின்றதா என்பதை மதிப்பீடு செய்தல்,
3. மொழியாற்றல் விருத்தியின்மை மாணவர்களின் அடைவுகளில் தாக்கம் செலுத்துகின்றமையை உறுதிப்படுத்தல்,
4. மாணவர்களின் மொழியாற்றல் வளர்ச்சிக்கான விழிப்புணர்வுகளை பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஏற்படுத்தல்.

**4. ஆய்வுப் பிரச்சினைகள்**

மொழித்திறன் விருத்தியில் வாசிப்பு, எழுத்து, பேச்சு, உச்சரிப்பு திறன்கள் காணப்படுகின்றன. இத்திறன்கள் சிறப்பாக அமையாதவிடத்து கற்றல் கற்பித்தல் நலிவடையும் என்பது பொய்யாகாது. இந்தப் பின்னணியில் நோக்குமிடத்து ஒரு மாணவன் சிறப்பான முறையில் வாசிக்காவிடத்து அவனால் பாடத்தினை பூரணமாக அறிந்து கொள்ள முடியாது. வாசிக்கத் தெரியாத மாணவர்கள் ஒரு வகுப்பறையில் காணப்படுகின்றபோது சிறப்பாக வாசிக்கின்ற மாணவர்களுக்கு கற்பித்தலை வெற்றிகரமாக மேற்கொள்ள ஆசிரியர் சிரமப்படுகின்றனர். இதனால் வாசிப்புத் திறனில் சிரமப்படுகின்ற மாணவர்கள் உளரீதியாகப் பாதிக்கப்படுவதுடன் கற்றல் கற்பித்தல் செயல்களில் விலகி நிற்கின்றனர். அதுபோன்று எழுத்துத் திறனில் குன்றியவர்கள் தாமதமாக எழுதுவதுடன் எழுத்துப் பிழையிட்டு எழுதுகின்றனர். இதனால் மாணவர்களுக்கு எழுதுவதற்கு விருப்பம் குறைவடைகின்றது. மற்றும் ஆசிரியர்கள் பயிற்சிக் கொப்பிகளை இலகுவாக திருத்துவதற்கு சிரமப்படுகின்றனர். அத்துடன் அனைத்து விடயங்களையும் கரும்பலகையில் ஆசிரியர் எழுதிவிட வேண்டியுள்ளதால் குறிப்பிட்ட நேரத்தினுள் குறித்த பரப்பை கற்பிக்க ஆசிரியர் சிரமப்படுகின்றனர். மற்றும் பேச்சுத்திறன் மற்றும் உச்சரிப்புத் திறன் குறைவான மாணவர்கள் வகுப்பறையில் காணப்படும் போது ஏனைய மாணவர்கள் தங்களை ஏளனமாக நினைப்பார்களோ என்று உளரீதியாக பாதிக்கப்படுவதுடன் பேச்சுப் போட்டிகளில் கலந்து கொள்ளவும் விருப்பமற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இம் மாணவர்கள் வெளிப்படையாகப் பேசாது மௌனமாக இருப்பதனால் கற்றல் கற்பித்தலில் ஈடுபடாது ஒதுங்கி வாழ்கின்றனர்.அத்துடன் இவ்வாறன மொழிக்திறன் குறைவான மாணவர்களுக்கு தொழிநுட்ப அடிப்படையில் அதாவது கனணிமூலம், ஆய்வுகூடப் பரிசோதனை மூலம் கற்பித்தலை மேற்கொள்வதற்க்கு ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். (2)அதுபோன்று இம் மாணவர்கள் பாடசாலையில் தலைமைத்துவப் பொறுப்புக்களில் பங்கேற்காது தங்களது திறன்களைப் இனங்கண்டு வெளிக்காட்ட விரும்பதவர்களாகக் காணப்படுகின்றனர்.

**5. ஆய்விற்கான நியாயம்**

மொழித்திறன் விருத்தியில் பின்தங்கியிருப்பதற்கான காரணங்களை இனங்கண்டு அவற்றிற்காக தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும்.மேலும் வகுப்பறையில் ஆசிரியர்கள் கற்பிக்கும் போது மாணவர்களின் மொழித்திறன் விருத்தியை வளர்த்துக் கொள்வதற்கு ஏற்ற செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் இடர் படுகின்ற மாணவர்களை சரியான முறையில் இனங்கண்டு அவர்களுக்கான பரிகார கற்பித்தலை

மேற்கொள்ள வேண்டும். இம்மாணவர்களை உளரீதியாக ஆற்றுப்படுத்துவதுடன் தன்நம்பிக்கையும் வளர்க்க வேண்டும். மற்றும் கற்றலில் ஆர்வமின்றி ஏனோதானோ என்று இருப்பவர்களை கற்றலில் ஈடுபடச்செய்வதுடன் நெறிபிறழ்வானதும் தவறான நடத்தையுடையவர்களையும் மாற்றியமைக்கலாம். எனவே இவ்வாய்வினை மேற்கொள்கின்ற போது மொழி விருத்தியில் குறைவான ஆற்றல்களையுடையவர்களை இனங்காண்பதுடன் அவற்றிற்கான தீர்வுகளையும் பெற்றுக்கொள்ள முடியும். கற்றலில் மேலும் உயரிய இலக்கையடைய இவ்வாய்வு உதவக் கூடியதாக உள்ளது.

## II. இலக்கிய மீளாய்வு

"மாணவர்களின் மொழியாற்றல்களில் பாசாலை, ஆசிரியர்கள், பெற்றோர்களின் தாக்கம்" எனும் தலைப்பில் கூறப்பட்ட ஆய்வுமுடிவின் படி மாணவர்கள் தமது கற்றலை வினைத்திறன் கொண்டு செயலாக்கம் கொடுப்பதற்கு மொழியாற்றலை உரிய முறையில் மாணவர்களுக்கு வழங்கவேண்டும் என ஆராயப்பட்டுள்ளது [6]தமது ஆய்வானமாணவர்கள் மத்தியில் வாசிக்கும் ஆர்வம் இப்பொழுது படிப்படியாக அருகி வருகின்றது. அதற்கான அடிப்படைக் காரணமாக ஆய்வு செய்து இளம் உள்ளங்களில் வாசிக்கும் ஆர்வத்தை ஊட்டும் முயற்சிகளை கல்வித்துறையினர் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ள முன்வர வேண்டும். இது கல்வித் துறையினர் படிப்படியாக செய்யவேண்டிய ஒரு பாரிய பணியாகும் [5] எழுத்துக்களின் ஒலி வரி வடிவங்களை சொற்களில் இனங்கானச் சொற்பொருளைத் தேடியறிதல் மேலதிக வாசிப்பு நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட பந்தியை வாசித்தல், விளம்பரங்களை அறிவித்தல் போன்றவற்றை வாசிப்புத்திறனை அதிகரிக்கச்செய்கின்றன[5].

## III. ஆய்வுமுறையியலும் வடிவமைப்பும்

தரவுகளைச் சேகரிப்பதற்காக ஆய்வுக் கருவிகள் தயாரிக்கப்பட்டன. இதற்காக வினாக் கொத்துக்கள் தயாரிக்கப்பட்டு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், மாணவர்,மாணவர்களின் பெற்றோர் ஆகியோரிடம் கொடுத்துத் தரவுகள் பெறப்பட்டு அவை தொடர்பான முடிவுகள் தொகுக்கப்பட்டன. இவற்றுடன் அவதானமுறை, உரையாடல் முறைகள் மூலமும் தரவுகள் பெறப்பட்டன.

| மாதிரி | பயன்படுத்திய ஆய்வுக்கருவிகள் |
|---|---|
| வினாக்கொத்து | அதிபா, ஆசிரியா், மாணவா், |
| அவதானம் | மாணவா்கள் |
| உரையாடல்கள் | ஆசிரியா், மாணவா், பெற்றோா் |

இவ்வாய்வுக்கென கல்குடா கல்வி வலயத்தின் கோரளைப்பற்றுப் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டு அங்குள்ள IC வகை பாடசாலைகள் 04 உம் மாதிரிப் பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்டன. ஆய்வு மூலம் பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு பின்னர் பெறப்பட்ட முடிவுகள் அனைத்தும் பொதுமையாக்கம் செய்யப்பட்டன. அதன் மூலம் ஆய்வு தொடர்பான உண்மை நிலை வெளிக் கொண்டுவரப்பட்டது. இதன் அடிப்படையில் இவ்வாய்வினை மேற்கொள்வதற்குத் தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளாக அதிகரிக்கச்செய்கின்றன [5].

வினாக்கொத்து, நேர்முகங்காணல், அவதானம் என்பன அமைந்தன.

**1. மாதிரித் தெரிவு**

கல்குடா கல்வி வலய கோரளைப்பற்று 1ஊ வகைப் பாடசாலைகள் 4 உம் ஆய்விற்கான மாதிரிப் பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்படன.

| குறியீடு | பாடசாலை பெயர் | ஆசிரியர்களின் எண்ணிக்கை | கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் எண்ணிக்கை தரம் (6-9) |
|---|---|---|---|
| A | மட்/ கல்/ கறுவாகேணி விக்னேஷ்வரா வித்தியாலயம். | 42 | 124 |
| B | மட்/ கல்/ கிரான் மகாவித்தியாலயம். | 50 | 156 |
| C | மட்/கல்/முறக்கொட்டன் சேனை சு.மு.ஆ வித்தியாலயம். | 46 | 138 |
| D | மட்/ கல்/ சந்திவெளி சித்திவிநாயகர் வித்தியாலயம். | 32 | 104 |

அட்டவணை 3.0(மூலம் : கல்குடா வலயக்கல்வி அலுவலகம்)

| குறியீடு | மாதிரி ஆசிரியர்கள் | மாதிரி மாணவர்கள் |
|---|---|---|
| A | 8 | 25 |
| B | 10 | 31 |
| C | 9 | 27 |
| D | 6 | 21 |


அட்டவணை 3.1

மேற்குறிப்பிட்ட 04 மாதிரிப் பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இலகு எழுமாற்று மாதிரிமூலம் 5 : 1 எனும் விகிதத்தில் தெரிவு செய்யப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. இங்கு மொத்தமாக 4 பாடசாலை அதிபர்களும், 33 ஆசிரியர்களும், 104 மாணவர்களும் இலகு எழுமாற்று மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## IV. தரவுப்பகுப்பாய்வும் வியாக்கியானமும்

**சிறப்புக்குறிக்கோள் : 1**


1. கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் வாசிப்பு திறன் தொடர்பான ஆற்றல்கள் குறித்த பகுப்பாய்வு




**உரு : 4.1**

104 மாணவர்களில் 86 மாணவர் சாதாரண ஆற்றல்களையும் 18 மாணவர்கள் நன்றான ஆற்றல்களையும் கொண்டுள்ளனர். மூன்று தரப்பினரிடமும் பெற்றுக்கொண்ட தரவுகளின்படி மாணவர்களின் மொழித்திறனில் திருப்திகரமான நிலை காணப்படவில்லை.


**2. மாணவர்கள் வாசிக்கும் விடயங்களை கிரகித்துக் கொள்வது தொடர்பான பகுப்பாய்வு**




உரு : 4.2

33 ஆசிரியர்களில் 26 பேர் மாணவர்களின் கிரகித்தல் திறன் சாதாரணம் என்றே கூறியுள்ளனர். இருதரப்பினரிடமும் பெற்றுக்கொண்ட தரவுகளின்படி வாசிக்கும் ஆற்றல்கள் மாணவர்களிடம் மந்தகதியாகவே காணப்பட்டது.

**3. மாணவர்கள் குறில் நெடில்களை அனுசரித்து வாசிப்பது தொடர்பான பகுப்பாய்வு**





**உரு : 4.3**

33 ஆசிரியர்களும் 73 மாணவர்களும் குறில் நெடில் பிரச்சினைகள் உள்ளதை உறுதிப்படுத்தியுள்ளனர். இருவரிடமும் பெற்றுக்கொண்ட தரவுகளின்படி தவறான உச்சரிப்பு மாணவர்கள் மத்தியில் காணப்படுகின்றமையால் மாணவர்கள் தாழ்வுமனப்பான்மைக்குத்தள்ளப்படுகின்றனர்.

**சிறப்புக்குறிக்கோள் : 2**


**4.4 மாணவர்களின் எழுத்துத்திறன் தொடர்பான ஆற்றல்கள் தொடர்பான பகுப்பாய்வு**




82 மாணவர்கள் எழுத்துத்திறன் சாதாரணமாகஉள்ளது எனக்கூறியுள்ளனர். இருதரப்பினரிடமும் பெற்றுக்கொண்ட தரவுகளின்படி எழுத்துத்திறனாற்றல்கள் மாணவர்கள் மத்தியில் சாதாரணமாகவே காணப்பட்டது.

**சிறப்புக்குறிக்கோள் : 3**


**4.5 கூறிய விடயங்களை குறிப்பிட்ட நேரத்தில் எழுதுவது தொடர்பாக வினாவியபோது.**




உரு : 4.5

22ஆசிரியர்களும் 73 மாணவர்களும் எழுதுவதில் நேரம் தாமதித்தலை மாணவர்களிடம் சாதாரணமாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.மூன்று தரப்பினரிடமும் பெற்றுக்கொண்ட தரவுகளின்படி மாணவர்களின் எழுதும் நுட்பங்களிலும் திருப்திகரமான நிலை காணப்படவில்லை.

**4.6 பேச்சுத்திறன் தொடர்பான ஆற்றல்களை நிறுபிப்பதற் கான முயற்சிகளின் பகுப்பாய்வு**




உரு : 4.6

எனவே இவற்றில்இருந்து மாணவர்களின் மொழித்திறன் குறைபாடுகளால் முறையான கல்வி அறிவினைப் பெறுவது சாத்தியமாகாது. எனவே மொழித்திறனை விருத்தியாக்குவதன் மூலம் கற்றல் நடவடிக்கைகயை வினைத்திறன் கொண்டதாக மாற்றலாம்.

- **சிறப்புக் குறிக்கோள்: 4**

**4.7 மொழித்திறன் விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு**




உரு : 4.7

104 மாணவர்களின் பெற்றோர்களில் 83 பெற்றோர்களுக்கு நேரம் குறைவு காரணமாக பிள்ளைகளின் மொழித்திறன் விருத்தியில் அக்கறைகாட்டடுவது மிகக்குறைவென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

## V. தீர்வுகளும் விதந்துரைப்புக்களும்

### 5.1 எழுத்து திறன் தொடர்பான ஆற்றல்கள்

- **விதந்துரைப்புகள்**

இடர்படும் மாணவர்களிடம் காணப்படும் எழுத்துத் திறனை மேலதிக நேரம் ஒதுக்கி கண்டறிவது சிறப்பானது.அந்த வகையில் மாணவர்கள் தினமும் ஏதாவது ஒரு விடயத்தைப் பற்றி எழுதிக் கொண்டிருத்தல் வேண்டும்.எழுத்துக்களை எழுதும் போது இலக்கணவழு ஏற்படாது எழுதப்பழக்க வேண்டும். மற்றும் ஒருவர் நன்கு எழுதத்தெரிந்தவர்களாக காணப்பட்டாலும் குறிப்பிட்ட நேரத்தில் எழுதும் எழுத்துக்கே மதிப்பதிகம். எனவே மாணவர்கள் விடயங்களை குறிப்பிட்ட நேரத்தில் எழுதப்பழக்கும் போது பரீடசையை மையமாகக்கொண்ட கல்விக்கு அவர்களால் விருத்திநிலையை அடைய முடியும். ஆசிரியர்களும், பெற்றோர்களும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும்.

### 5.2. பேச்சுத்திறன் தொடர்பான ஆற்றல்கள்

- **விதந்துரைப்புகள்**

வேலை வாய்ப்புச் சந்தையாக உள்ள இவ்வுலகத்தில் பேச்சுத் திறன் மிகவும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. ஒருவருடைய வெற்றிக்கு மிகவும் அடிப்படையாக விளங்குவது அவர் பெற்றுள்ள பேச்சுத்திறனேயாகும். அந்த வகையில் மாணவர்கள் தங்களிடம் காணப்படும் பேச்சுத்திறனை விருத்தி செய்யப்பழக வேண்டும். அந்த வகையில் மாணவர்களிடம் காணப்படும் சமூகப்பேச்சு வழக்குச் சொற்களை தவிர்த்து கற்றல் நடவடிக்கைகளின் போது நியம மொழியினை பயன்படுத்தப் பழக்க வேண்டும். இதற்காக பல சூழலிலும் இருந்து வரும் நண்பர்களுடன் பேசிப்பழக இடம் கொடுக்க வேண்டும்.பாத்திரங்கள் ஏற்று வாசிக்கப்பழக்க வேண்டும். வகுப்பறையில் ஆசிரியர்களும், வீடுகளில் பெற்றோர்களும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும்.

### 5.3 கிரகித்தல் திறன் தொடர்பான ஆற்றல்கள்

- **விதந்துரைப்புகள்**

ஒருவரின் மொழித்திறனானது செவிமடுத்தலிலே ஆரம்பமாகின்றது எனலாம். அந்தவகையில் செவிமடுத்தல் சிறப்பாக அமையும் போதுதான் ஏனைய திறன்களும் சிறப்பாக அமையும். இவ்வாறான செவிமடுத்தல் திறனை மாணவர்கள் தங்களிடம் விருத்தியாக்கிக் கொள்ளும் வகையில் வாசிக்கும் விடயங்களையோ,எழுதும் விடயங்களையோ மீண்டும் மீண்டும் ஞாகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கையாள வேண்டும். அதாவது யோகாபயிற்சிகள் மனதை ஒருமைப்படுத்தும் பயிற்சிகள் தியானம் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு விடயங்களை கிரகித்து ஞாபகப்படுத்தி தங்களின் கிரகித்தல் நிலை எவ்வாறு உள்ளது என்பதை அடிக்கடி பரீட்சித்துப் பார்ப்பதற்கான பயிற்சிகளை வழங்க வேண்டும்.இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது மாணவர்கள் ஒவ்வொருவரிடம் எவ்வாறான கிரகிக்கும் ஆற்றல்கள் உள்ளன என்பதனை கண்டறிந்து கொள்ள முடியும்.

### 5.4 வாசிப்பதில் ஏற்படும் இடர்பாடுகள்

- **விதந்துரைப்புகள்**

பாடசாலைக்கு சொல்லும் காலத்தில் வாசிப்புத் திறனை விருத்தி செய்யாத பிள்ளை பிற்காலத்தில் அதனை விருத்தி செய்யுமென்று கூற முடியாது. எனவே ஆசிரியர்கள் பெற்றோர்கள் வாசிப்புத்திறனில் மாணவர்கள் அடையும் இடர்பாடுகளை தவிர்பதற்கான நடவடிக்கைகளை உருவாக்க வேண்டும். அந்த வகையில் முதன்மை நிலைகளில் பல்வேறு வாசிப்பை முன்னேற்றுவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்தல், மாணவர்களிடம் வாசிப்பு தொடர்பான மகிழ்ச்சிகரமான செயற்பாடுகளை முன்னெடுத்தல்வாசிப்புக்கு உதவக்கூடிய விளையாட்டுக்களை செயற்படுத்துதல்,வாராந்தம் நூ

லகத்திற்கு அழைத்துச் செல்லுதல்வகுப்பறை மட்டத்தில் பத்திரிகை சஞ்சிகைகளை காட்சிப்படுத்துதல், பெற்றோர்களுக்கு வாசிப்புத் திறனை விருத்தி செய்யக்கூடிய ஆலோசனைகளை வழங்குதல்,பழைய மாணவர்கள் சங்கம் இடர்படும் மாணவர்களை இணங்கண்டு அவர்களுக்கு விஷேட வகுப்புக்கள் நடாத்துதல்,வாசிப்புத்திறனை விருத்தி செய்யும் வகையில் ஒவ்வொரு வகுப்புக்கும் பொறுப்பாக ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். இது போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது மாணவர்கள் தங்களது வாசிப்புத்திறனை மேலும் விருத்தி செய்து கொள்வார்கள்.

**5.5 எழுதுவதில் ஏற்படும் இடர்பாடுகள்**

- **விதந்துரைப்புகள்**

வகுப்புக்களில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்தல் அதாவது எழுத்தட்டவணைகளை சிதறி விட்டு அவற்றிலிருந்து வசனங்களை ஆக்கும் பயிற்சிகள் படங்களைப் பார்த்து வசனம் அமைக்கும் பயிற்சிகளை வழங்குவதினூடாக மாணவர்களின் எழுத்துத்திறனை மேம்படத்திக் கொள்ளலாம்.இடைநிலை வகுப்புக்களில் எழுத்தாற்றலை வளர்ப்பதற்கு சொல் இணையங்களை ஆக்க விசைப்படுத்தல் முதலிய நுட்பங்களை ஏற்படுத்தல்.பாடசாலை மட்டத்தில் கட்டுரை கவிதை போட்டிகள் நடாத்துதல் பிழையிட்டு எழுதும் போது தகுந்த பரிகார கற்பித்தலை மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் மாணவர்களிடையே எழுத்தாற்றல் திறனை வளர்க்க வேண்டும்.

**ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடுகள் மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படுத்தும் பங்களிப்பு**

**5.6 கற்பித்தலில் மொழித்திறனின் பங்களிப்பு**

- **விதந்துரைப்புகள்**

இன்றைய காலகட்டத்தில் கல்வியானது மிகவும் துரிதமாக வளர்ந்து வருகின்றது. மாணவர்களிடையே மொழித்திறனை விருத்தி செய்யும் வகையில் கற்பித்தல் செயற்பாடுகள் காணப்படல் வேண்டும். இவ்வாறாக மாணவர்களின் மொழித்திறன் ஆசிரியரின் கற்பித்தலில் பங்காற்றுகின்றன எனலாம். அந்த வகையில் மொழியினூடாக மாணவர்கள் தம் ஆளுமைகளை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். புதிய நுட்பங்களை பயன்படுத்தி கற்பிக்க வேண்டும், மற்றும் காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்று வழிகளை கையாண்டு கற்பித்தல் அதாவது புதிய தரவுகளை பயன்படுத்தி கற்பிக்க வேண்டும்.

5.7 மாணவர்களின் கற்றலில் பெற்றோர்களின் பங்களிப்பினை கண்டறிதல்மொழித்திறன் விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு

- **விதந்துரைப்புகள்**

மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் பெற்றோர்கள் பாரியபங்காற்ற வேண்டியவர்களாக காணப்படுகின்றனர். ஆனால் மாணவர்களின் மொழித்திறனில் பெற்றோர்களின் பங்களிப்பு அதிகமாக காணப்படுதல் வேண்டும்.மற்றும் பாடசாலையில் அதிபர், ஆசிரியர்களினால் கூறப்படும் ஆலோசனைகளை முழுமையாக செயற்படுத்த வேண்டும். அந்த வகையில் பெற்றோர் பிள்ளைகளுடன் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கதைத்தல் கதைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டும்.திருத்தமான மொழிப் பிரயோகத்தை ஏற்படுத்த வேண்டும்.நூல்நிலையத்திற்கும் வேறு இடங்களுக்கும் அழைத்துச் செல்ல வேண்டும்.கதைக்கும் போது பிள்ளைகளால் விளங்கிக் கொள்ளாத இடத்தில் விளக்கம் கூறுதல் வேண்டும்.விடயங்களை எழுதுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.பிள்ளைகளுடன் பெற்றோர்களும் சேர்ந்து வாசிக்க வேண்டும். மற்றும் பாடசாலைக்கு அடிக்கடி சென்று பிள்ளைகளின் நிலைகளை கேட்டறிந்து அதிபர், ஆசிரியரினால் கூறப்படும் ஆலோசனைகளை நிறைவேற்ற வேண்டும்.

**சாராம்சம்**

கனிஷ்ட இடைநிலைப்பிரிவில் வைத்தே மாணவர்களின் மொழியாற்றலை உறுதிப்படுத்துகின்றபோது தான் அவர்களின் கற்றலுக்கான அடித்தளம் சாத்தியப்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் தான் தொடர்ச்சியான வினைத்திறன் மிக்க கற்றல் பாதைக்கு அது வித்திடுகின்றது.

**உசாத்துணைகள்**

1. கருணாநிதி.மா,(2006),கல்விச்செயற்பாட்டில் அதிகரித்து வரும் பெற்றோரின் வகிபங்கு, ரொக்னோபிரின்ட், கொழும்பு அகவிழி சஞ்சிகை.
2. சந்திரசேகரம். (1995) மொழித்திறனும்கற்றல் வழிமுறைகளும்” கொழும்பு அகவிழி சஞ்சிகை.
3. சிவநேசச்செல்வன்.(2007) வாசிப்பும் கிரகித்தலும், நியூ செஞ்சுரி புக் கவுஸ்.
4. நு.ஃ.மான்.எம்.ஏ,(2002), ஆரம்ப இடைநிலை வகுப்புக்களில் தமிழ்மொழி கற்பித்தல், கொழும்பு தமிழ்ச்சங்கம்.
5. ஜெயராசா.சபா, (2008),கற்றல் தொடர்பான இடர்களை எதிர் கொள்வோர்,ரொக்னோபிரின்ட், கொழும்பு அகவிழி சஞ்சிகை
6. Jon Swain, Sian Welby, Greg Brooks, Sara Bosley, Lara Frumkin, Karen Fairfax-Cholmeley, Alegría Pérez and Ol’ga Cara. December 2013 Learning Literacy together: the impact of Family Literacy on parents, children, families and schools” http://www.nrdc.org.uk/wp-content/uploads/2017/05/Swain-et-al-2010-fam-lit-full-report-with-app